## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 294/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw12 /Pw8 |
| Name | : Kamaraj |
| Father/Husband's Name | : Pattani |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10.09.2025.

**முதல் விசாரணை:**

நான் கடந்த 30.06.2022 ம் தேதி தாழ்ம்பூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து ஒய்வு பெற்றேன். நான் 26.09.2015ம் தேதியன்று காலை 10 மணிக்கு மறைமலைநகர் காவல்நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது, திரு. ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நிலைய குற்ற எண்.828/2015 இதச பிரிவு 279,304(ஏ) கீழ் வழக்கு பதிவு செய்தேன். வழக்கின் தன்மை கருதி, வழக்கின் கோப்புகளை உதவி ஆய்வாளரர் தன்ராஜ் வசம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

சம்பவ இடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். புகார் பெற்றவுடன் மறுநாள் காலையில் முதல் தகவல் அறிக்கை பெற்றப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் நீதிமன்றத்திற்கு புகார்தாரருக்கு, காவல்நிலைய வழக்கு கோப்புகளுக்கு அசல் முதல் தகவல் அறிக்கை அனுப்பப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேனா என்றால் நீதிமன்ற காவலர் மூலம் அனுப்பி வைத்தேன். அசல் முதல் தகவல் அறிக்கையை தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பேன் என்றால் சரிதான். நான் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் பார்வைக்கு சமர்ப்பித்தேன் என்றால் சரிதான். 304(ஏ) இதசவின் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் பார்வைக்கு வழக்கு கோப்புகளை

வைக்கவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் 304(ஏ) இதசவின் புலன் விசாரணை செய்வதற்கு காவல் உதவி ஆய்வாளருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.